## <u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
## <u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
## <u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

ம.சா. 3 தேதி. 18.06.2025

| MCOP. No. | 265/2019 | | |
|---|---|---|---|
| பெயர் | Dr.R.சீனிவாசன் | த/பெ, | இராஜேந்திரன் |
| வயது | 27 | தொழில் | மருத்துவர், பாண்டிச்சேரி |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது பாண்டிச்சேரியில் உள்ள P.I.M.S மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். மனுதாரர் விவேகானந்தன் என்பவர் கடந்த 22.04.2019 அன்று சாலை விபத்தில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தார். அவரை அப்போது பணியில் இருந்த மருத்துவர் பரிசோதனை செய்ததில் அவருக்கு மூளையின் இருபகுதியிலும் Cerebillar என்ற பகுதியில் இரத்தக்கசிவு ஏற்பட்டிருந்தாக குறிப்பிட்டப்பட்டுள்ளது. மூளையின் வலது பக்கத்தில் Parietal பகுதியில் இரத்தக்கசிவு ஏற்பட்டிருந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. முதுகின் தண்டு வடத்தில் வலது பகுதியில் L–5 என்ற எலும்பில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தாகவும், வலது பக்க நடுவிரலில் மூட்டு நழுவி காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவரை மேலும் பரிசோதனை செய்ததில் G.C.S. 12/15 என்ற அளவில் இருந்தது. அவருக்கு Conservative Management என்ற முறையில் சிகிச்சை அளிக்கப்பட்ட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவருக்கு வலது பக்க நடுவிரலில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்கு மாவுக்கட்டு போட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அவர் 26.04.2019 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். மனுதாரர் தலை மற்றும் தண்டுவடத்தில் ஏற்பட்ட காயங்களினால் அவர் படுத்தப் படுக்கையாக இருந்திருக்கலாம். இதுபோல் காயங்கள் ஏற்பட்டு அவர் இறப்பதற்கான வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. எங்கள் மருத்துவமனையில் மனுதாரருக்கு வழங்கிய விடுவிப்புசான்று ஏற்கனவே மசாஆ 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

விவேகானந்தன் நான் பணிபுரியும் PIMS மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்ட காலத்தில் நான் பணியில் இல்லை என்றால் சரிதான். அவருக்கு எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறை என்றால் சரிதான். சிகிச்சை அளித்த கால கட்டத்தில் அங்கு இருந்த நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவர் தான் மசாஆ6ல் சொல்லப்பட்ட சிகிச்சை முறைப்பற்றி

தெரியும் என்றால் சரியல்ல. என்னிடம் உள்ள சிகிச்சை செய்ததற்கான மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் சிகிச்சை பெற்றவரின் Discharge Summary யை வைத்தும் அது தொடர்பான கோப்புகளை வைத்தும் சாட்சியம் அளிக்கிறேன். எங்கள் மருத்துவமனையிலிருந்து 26.04.2019 ல் விடுவிக்கப்பட்டுள்ளார். எங்கள் விடுவிப்பு சான்றில் மனுதாரரை படுத்த படுக்கையிலேயே வைத்து விடுவிப்பு செய்ததாக கூறப்படவில்லை.

மனுதாரர் தலை மற்றும் தண்டுவடத்தில் ஏற்பட்ட காயங்களினால் அவர் படுத்தப் படுக்கையாக இருந்திருக்கலாம் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளது எதன் அடிப்படையில் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு மூளையில் ஏற்பட்ட காயங்கள் அவரால் எழுந்திருக்க இயலாத வகையிலும் அவர் படுத்த படுக்கையாகத்தான் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு என்பதாலும் சாட்சியம் அளித்தேன். நான் கொண்டுவந்த Discharge Summaryல் குறிப்பிட்டுள்ளவாறு 4 வாரங்கள் கழித்து மறுசிகிச்சைக்கு காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு வந்தாரா என்று தெரியுமா என்றால் என்னிடம் உள்ள கோப்புகளில் அவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற விபரம் மட்டுமே உள்ளது. 22.04.2019 முதல் 26.04.2019 வரை அவர் சிகிச்சையில் இருந்தபோது இருந்த கோப்பின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன்.

விவேகானந்தனுக்கு ஏற்பட்ட இரத்தக்கசிவு அவரை டிஸ்சார்ஜ் செய்த நேரத்தில் இரத்தக்கசிவு இருந்ததா என்றால் CT Scan மறுபடியும் எடுத்து பார்த்ததில் அதில் மூளையில் உள்ள இரத்தஉறைவு அதிகரிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது நரம்பியலுக்கு மட்டும் நிலையாக உள்ளதாக டிஸ்சார் சம்மரியில் கூறுப்பட்டுள்ளது. எலும்பு முறிவை பொருத்து மருந்து மாத்திரைகள் மற்றும் Bed Rest ஆக இருந்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மனுதாரருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பொறுத்து சிகிச்சை அளித்த மருத்துவர் தான் சாட்சியம் அளிக்க முடியும் உங்களால் அளிக்க முடியாது என்றால் சரியல்ல.

<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

விவேகானந்தன் தற்போது உள்ள நிலைகுறித்து தெரியுமா என்றால் இன்று தான் அவர் இறந்த விபரம் தெரியும். அவர் எப்போது இறந்தார் என்றும், எதனால் இறந்தார் என்றும் தெரியுமா என்றால் தெரியாது. GCS 12/15 என்பது அட்டவணைப்படி Moderate Trauma என்ற நிலையில் உள்ளது என்று அர்த்தம். பொதுவாக ஒரு இறப்பை பொருத்த வரையிலும் உடற்கூறாய்வு செய்தால் தான் இறந்த நபரின் இறப்பிற்கான காரணத்தை முழுமையாக அறியமுடியும் என்றால் சரிதான். சிகிச்சை பெற்றவர் இறந்த பின் உடற்கூறாய்வு செய்யப்பட்டாரா என்றால் அதுப்பற்றி கோப்பில் இல்லை. நான் இளநிலை மருத்துவம் படித்துள்ளேன். டிஸ்சார்ஜ் சம்மரியில் நரம்பியல் பிரச்சனை சம்பந்தமாக அவர் இறப்பதற்கு வாய்ப்பு உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் நரம்பியல் தொடர்பான சிறப்பு மருத்துவர் இல்லை என்பதால் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. என்னால் மருத்துவம் சார்ந்த

கேள்விகளுக்கு கோப்புகளின் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் பதில் அளிக்க இயலும்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**:-

GCS அளவிற்கான அட்டவணை உள்ளதா? அந்த அளவீடு என்ன பயன்பாட்டிற்காக பார்க்கப்படுகிறது?

**பதில்:–** அட்டவணை உள்ளது. அந்த GCS ஒரு அடிப்பட்ட நபரின் நரம்பியல் சம்பந்தமான நிலை எப்படி உள்ளது என்பதை கணிப்பதற்காக இந்த GCS எடுக்கப்படுகிறது. எடுக்கப்பட்ட GCSன் அடிப்படையில் சிகிச்சை மேற்கொள்ளமுடியுமா என்றால் ஒரு நபர் சிகிச்சையின் பொழுது அந்த நேரத்தில் அவரால் சுவாசிப்பதற்கு கடினமாக இருக்கிறதா என்பதை கண்டயறிவும், அவரது நரம்பியல் தொடர்பான செயல்பாடுகள் எப்படி உள்ளது என்பதை பரிசோதனை செய்வதற்காகவும் இந்த GCSன் அளவைப்பொருத்து அந்த நேரத்தில் அவருக்கு ஏற்பட்டுள்ள நரம்பியல் தொடர்பான சிகிச்சைக்கு இது உதவியாக இருக்கும். அதன் அடிப்படையில் மேற்படி விவேகானந்தனுக்கு GCS எடுக்கப்பட்டது. என்னிடம் GCS அட்டவணைப்படி GCS 12/15க்கு என்ன குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றால் Mild to Moderate என்று இருக்கும். என்னிடம் உள்ள கோப்பில் சிகிச்சை அளிக்கப்பட்டவருக்கான டிஸ்சார்ஜ் சம்மரியில் அவருக்கான GCS 12/15 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.